அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இல: 8/2005 (IX)

எனது இல: EST-7/LOANS/04/1040
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு 07,
2012.07.27

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

## தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயம், 11 ஆம் பிரிவின் திருத்தம் - ஆதனக் கடன்

மேற்படி விடயம் குறித்து வெளியிடப்பட்ட 2005.03.31 ஆம் திகதிய 8/2005 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை மற்றும் மேற்படி சுற்றறிக்கையினைத் திருத்தி வெளியிடப்பட்ட 8/2005(I) ஆம் இலக்கத்திலிருந்து 8/2005(V) ஆம் இலக்கம் வரையிலான அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைகளின் மீது தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. மேற்படி சுற்றறிக்கை ஏற்பாடுகளால் அறிமுகப்படுத்தப்பட்ட சொத்துக் கடன் திட்டத்தில் இருந்து பின்வாங்குவதற்கு வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதிக் கூட்டிணைப்பு வங்கி (Housing Development Finance Corporation Bank) இனால் எடுக்கப்பட்ட தீர்மானம் காரணமாக அரசாங்க உத்தியோகத்தர்களால் எதிர்நோக்கப்படுகின்ற கஷ்டங்களைத் தவிர்க்கும் பொருட்டு பின்வரும் நடவடிக்கையை எடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

I. ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட அதே கடன் விண்ணப்பங்களின் அடிப்படையில் மேற்படி வங்கியில் இருந்து சொத்துக்கடனின் முற்பணப் பகுதியொன்றினைப் பெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதிக் கூட்டிணைப்பு வங்கியில் இருந்து கடனின் நிலுவையினை வழங்குவதற்கு ஒழுங்குகளை ற்கொள்ளுதல்.

II. அரசாங்க உத்தியோகத்தர்களாக கணவன் மனைவி இருவரும் உள்ளவிடத்து வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதிக் கூட்டிணைப்பு வங்கியில் இருந் ஏற்கனவே பெறப்பட்ட கடனொன்றில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட காணியொன்றில் பகுதியளவில் கட்டப்பட்ட வீடொன்றின் வேலை நிர்மாணம்/ வீட்டினைத் திருத்தியமைத்தல்/ மேலதிக நிர்மாணங்கள்/ நிர்மாணத்தினைப் பூர்த்தி

செய்தலுக்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதிக் கூட்டிணைப்பு வங்கியில் இருந்து இணைக் கணக்கொன்றின் ஊடாக கடனொன்றினை வழங்குவதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளுதல்.

III. இதனகத்துப் பின்னர், மேலே II ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிகழ்வுகள் தவிர வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதிக் கூட்டிணைப்பு வங்கிக்குஅரசாங்க த்தியோகத்தர்களின்சொத்துக்கடன்களுக்கான ப்பங்களைச் சமர்ப்பித்தலைத் தவிர்த்தல்.

03. மேலும், உத்தியோகத்தரால் ஏதாவது வேண்டுகோள் மேற்கொள்ளப்பட்டிருப்பின், 2005.03.31 ஆம் திகதியில் இருந்து 2010.01.01 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான சொத்துக் கடன் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கடன் விண்ணப்பங்களுக்கு பதிலிறுப்பாக சொத்துக் கடனை வழங்காததன் விளைவாக மக்கள் வங்கி/ இலங்கை வங்கி/ தேசிய சேமிப்பு வங்கி/ அரச ஈட்டு முதலீட்டு வங்கி/ வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் நிதிக் கூட்டிணைப்பு வங்கியில் இருந்து பெறப்பட்ட தனிப்பட்ட கடன்கள் இந்தச் சுற்றறிக்கை அமுல்ப்படுத்தப்படும் திகதியில் இருந்து பயனுற்றிருக்கும்படி அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான சொத்துக் கடனின் கீழ் பெறப்பட்ட கடனொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

04. 2005.03.31 ஆம் திகதிய 8/2005ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 27 ஆம் இலக்கப் பின்னிணைப்பு மற்றும் 2005.08.23 ஆம் திகதிய 8/2005(III) ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் 28 ஆம் இலக்கப் பின்னிணைப்பு இத்துடன் இணைக்கப்பட்ட 01 ஆம் 02 ஆம் இணைப்பில் குறிப்பிடப்பட்டவாறு திருத்தப்படுதல் வேண்டும்.

05. இந்தச் சுற்றறிக்கையானது பொதுத் திறைசேரியின் ஒருங்கிசைவுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/ பீ. வீ. அபேகோன்
செயலாளர்,
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

**இணைப்பு -01**

**பின்னிணைப்பு 27**

**வங்கியல் கடன் விடுவிக்கப்பட்டது பற்றி உரிய அமைச்சு/ திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டிய மாதிரிப்படிவம்.**

**(பிரிவு 11:4:4)**

............................................................ (அமைச்சின் செயலாளர் / திணைக்களத் தலைவர்)

............................................................ (அமைச்சு / திணைக்களம்)

திரு/ திருமதி/ செல்வி:..................................................................................அவர்களின் கடனை விடுவித்தல்.

---

1. வங்கியின் பெயரும் கிளையும் :..................................................................................
2. கடன் உரித்து இல :..................................................................................
3. கடன் பெறுநரின் முழுப்பெயர் :..................................................................................
4. I. கடன் பெறுநரின் தற்போதைய பதவி :..................................................................................
   II. கடன் பெறுநருக்கு உ ரிய சேவை :..................................................................................
5. விலாசம்
   தனிப்பட்ட :..................................................................................
   உத்தியோகபூர்வ :..................................................................................
6. அங்கீகரிக்கப்பட்ட கடன் தொகை :- ரூபா............................................. (இலக்கத்தில்)
   : - ரூபா............................................. (எழுத்தில்)
7. கடன் அங்கீகரித்த திகதி :-
8. கடன் அறவிடப்படும் காலப்பகுதி :-
   20................................ஆம் ஆண்டில் இருந்து 20...........................ஆம் ஆண்டு வரை
9. மாதாந்த கடன் தவணைக்கட்டணம் :-
   9.1 வட்டி உள்ளடங்கலாக தவணைக் கட்டணத்தின் பெறுமதி : ரூபா:...........................
   9.2 தவணைக்கட்டணங்களின் மொத்த எண்ணிக்கை : .......................................................

திகதி :-.............................................. ..........................................................................................

முகாமையாளர்

முகாமையாளரின் பெயர்

உத்தியோக பூர்வ முத்திரை

பிரதிகள் : 1. ........................................................................................... (அமைச்சு)

2.......................................................................................... (கடன் பெறுனர்)

## பின்னிணைப்பு 28

**(11:11:6 )**

## கடன்களைப் பெறுவதற்கான வங்கிகளின் பெயர்ப் பட்டியல்

1. மக்கள் வங்கி
2. இலங்கை வங்கி
3. தேசிய சேமிப்பு வங்கி
4. அரச ஈட்டு முதலீட்டு வங்கி